**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி**

**முன்னிலை : திரு மா. சந்திரமோகன்., பி.ஏ., பி.எல்.,**
மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி
திருவள்ளுவர் ஆண்டு 2056 விசுவாவசு வருடம் ஐப்பசித் திங்கள் 7–ம் நாள்
2025–ம் ஆண்டு அக்டோபர் மாதம் 24–ம் நாள் வெள்ளிக்கிழமை

******

**அசல் வழக்கு எண். 295/2017 ல் இடைமனு எண். 05/2025**

V. S. ராஜேந்திரன் .....மனுதாரர்/வாதி

...எதிராக...

1. சாவித்திரி (இறந்தார்)
2. சாமிநாதன்
3. கிருஷ்ணமூர்த்தி
4. தனலெட்சுமி
5. சந்திரா .... எதிர்மனுதாரர்கள்/ எதிர்வாதிகள்

இம்மனு இந்நீதிமன்றத்தில் என்முன்பாக 17.10.2025 அன்று இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு S. சுந்தரய்யா அவர்களும், 1ம் எதிர்மனுதாரர் இறந்தார், 2, 4, 5 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. R. ஆத்மநாதன் அவர்கள் ஆஜராகியும், 3ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. R. கார்த்திக்ராஜன் அவர்கள் ஆஜராகியும், 3ம் எதிர்மனுதாரர் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யப்பட்டும், 2, 4, 5 எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிருரை இல்லை என மேற்குறிப்பு செய்து கொடுத்துள்ளதை அனுசரித்தும் இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்.

**உத்தரவு**

மனுவுடன் தாக்கல் செய்துள்ள ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்வதில் ஏற்பட்டுள்ள காலதாமதத்தை மன்னித்து மேற்படி ஆவணத்தை ஏற்றுக்கொள்ள உத்தரவிடக்கோரி மனுதாரரால் இம்மனு உ.வி.மு.ச. கட்டளை–7

CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2025.10.24 18:16:30 +0530

விதி 14–ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>(1). மனுவின் சுருக்கம்</u>**

மனுதாரர் அசல் வழக்கில் வாதி ஆவார். 1 முதல் 5 வரையிலான எதிர்மனுதாரர்கள் மீது விளம்பல் மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்குத்தொடர்ந்து விசாரணைக்கு வந்து மனுதாரர் தரப்பு விசாரணை நடந்து வருகிறது. மனுதாரர் தரப்பில் குறியிட நிலக்கிரயத்துக்கான தவணை ரசீதுகள் இத்துடன் கொடுத்துள்ளேன். அவைகளை தாக்கல் செய்யவேண்டுமென்று தற்போது ஆலோசனை கிடைத்ததன் பேரில் விண்ணப்பம் செய்து தாக்கல் செய்கிறேன். மேற்படி இத்துடன் காலதாமதத்துடன் தாக்கல் செய்யப்படும் ஆவணங்களை ஏற்றுக்கொண்டு தகுந்த உத்தரவு வழங்க வேண்டியது அவசியமாகவும் நியாயமாகவும் உள்ளது. எனவே இத்துடன் தாக்கல் செய்யப்படும் ஆவணங்களை ஏற்றுக்கொண்டு தகுந்த உத்தரவு வழங்ககோரி மனுதாரர்களால் தாக்கல் செய்துள்ள இம்மனுவினை அனுமதிக்க வேண்டும்.

(2) 3ம் எதிர்மனுதாரர் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(3) 2, 4, 5 எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிருரை இல்லை என மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ளது.

**<u>(4) 3ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்த எதிருரையின் சுருக்கம்:</u>**

மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ள மனு நியாயப்படியும் சரியல்ல எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடிக்கு அருகதையாக உள்ளது. வாதியை ரீகால் செய்ய சரியான காரணம் குறிப்பிடப்படவில்லை. மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் இதுநாள் வரை எங்கு இருந்தது, எப்படி கிடைத்தது என்ற எந்த விவரத்தையும் குறிப்பிடாமலும் அந்த ஆவணங்களை உரிய காலத்தில் ஏன் தாக்கல் செய்யவில்லை என்ற விளக்கத்தையும், விவரத்தையும் மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ள அபிடவிட்டில் குறிப்பிட்டு கூறாமல் மனு தாக்கல் செய்துள்ளது சரியல்ல. மனுதாரர்/வாதியை ஏற்கனவே

CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2025.10.24 18:16:37 +0530

எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டு முழுவதும் விசாரணை முடிக்கப்பட்டுள்ள இந்நிலையில் மேற்படி குறுக்கு விசாரணையை சீர்குலைக்கும் நோக்கில் ஏற்கனவே குறுக்கு விசாரணையில் பதில் அளிக்கப்பட்ட சங்கதிகளுக்கு விரோதமாக சாட்சியம் ஏற்படுத்தும் நோக்கில் மனுதாரர்/வாதி அவரை மீண்டும் விசாரிக்க வேண்டும் என்ற நோக்கில் ரீகால் செய்ய தாக்கல் மனு செய்துள்ளது தள்ளுபடிக்கு அருகதையாக உள்ளது. மனுதாரர்/வாதி சரியான காரணம் கூறாமல் ரீகால் செய்யவும், ஆவணத்தை குறியீடு செய்யவும் மனு தாக்கல் செய்துள்ளது சட்டப்படி நிலைநிற்கத்தக்கதல்ல. எனவே மனுதாரர்/வாதி தாக்கல் செய்த மனுவை செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

5. இம்மனுவில் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை, சான்றாவணங்களும் குறியீடு செய்யப்படவில்லை.

**6. இம்மனுவில் தீர்வுக்குரிய பிரச்சனை மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதிக்கதக்கதா ?**

**7. <u>தீர்வு:</u>**

(i) மனுதாரர் தரப்பு வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. அசல் வழக்கானது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்குத் தொடர்ந்து விசாரணைக்கு நிலுவையில் இருந்து வருகிறது. மனுதாரர் தரப்பில் குறியிட சில முக்கியமான ஆவணங்கள் தாக்கல் செய்யவேண்டுமென்று தற்போது ஆலோசனை கிடைத்தன் பேரில் நிலக்கிரயத்துக்கான தவணை ரசீதுகள் தாக்கல் செய்கிறார் என்றும், மனுதாரர் வேண்டுமென்றோ, அலட்சியமாகவோ அவைகளை முன்பே தாக்கல் செய்யாமலிருக்கவில்லை என்றும் வாதிடப்பட்டது.

(ii) மனுதாரர் தரப்பில் மனுவில் கூறியுள்ள காரணங்கள் நியாயமானதாகவும், ஏற்றுக்கொள்ள கூடியதாகவும் உள்ளது. மேலும் இது விசாரணை நீதிமன்றமாக இருப்பதால் தரப்பினர்களுக்கு உரிய வாய்ப்பு கொடுத்து அதன் பின் வழக்கில்

CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2025.10.24 18:16:43 +0530

தீர்வு காண்பதே நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்று கருதி மனுதாரர் தாக்கல் செய்துள்ள இம்மனுவை அனுமதித்து உத்தரவிடுவது என்று முடிவு செய்து அவ்வாறு இம்மனுவின் பிரச்சனைக்கு தீர்வு காண்கிறது.

**முடிவில், இம்மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.**

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் குறிப்பெடுத்து, பின்னர் விரிவாக்கம் செய்யப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் சரிபார்க்கப்பட்டு பிழைத்திருத்தம் செய்யப்பட்டு 2025–ம் ஆண்டு அக்டோபர் மாதம் 24–ம் நாள் என் கையொப்பம் இடப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2025.10.24 18:16:50 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சீர்காழி.

**பின் இணைப்பு**

| | |
|---|---|
| மனுதாரர் தரப்பு சாட்சிகள் | – இல்லை – |
| மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் | – இல்லை – |
| எதிர்மனுதார்கள் தரப்பு சாட்சிகள் | – இல்லை – |
| எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணம் | – இல்லை – |

CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2025.10.24 18:16:57 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சீர்காழி.

அசல் வழக்கு எண்.295/2017 ல்
**இடைமனு எண்.05/2025**
நாள்.24.10.2025.